கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

ஓசியா (LUKE) 4:22

VOL - 27

ஆண்டு சந்தா ரூ. 100/-

செப்டம்பர் - SEPTEMBER

தனிப் பிரதி ரூ. 10/-

2026

வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-



நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.

2 தீமோத்தேயு 4:7

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 7

வாலிபர் பகுதி 9

ஓராண்டில்... வேதவாசிப்பு

சிறுவர் பகுதி 12

In Memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **Dr. P.C. PHILEMON RAJA** Ph.D.,

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா, M.S. (IT&M)., M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,
E. ஜோசப் பிரதீப், B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
P. பேபி ராஜா, D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் **B. கருப்பசாமி பாண்டியன்** B.A., B.L.
அட்வகேட் **V. சுப்பிரமணியன்** M.A., B.L.

கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 7.00 மணி

நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு மதியம் 3.30 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள்
மற்றும் திருமண நாள் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
அன்பின் வாழ்த்துக்கள்...



பல்வேறு இடங்களில் சுமார் 150 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் அரிசி வழங்கப்படுகிறது.

கிருபையுள்ள வார்த்தை
நம்மை நித்திய வாழ்வு வரை வழிநடத்தும்
நித்திய பிதாவின் வார்த்தை

YouTube
@graciouswordcoc

World Literature Publication : Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

நிறைவான வாழ்வு
FULFILLED LIFE



- P.C. பிலேமோன் ராஜா

பிரியமுள்ள கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், நிறைவான வாழ்வு அருளும் இயேசு ஆண்டவரின் பெயரினால் என்னுடைய வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!

இம்மாதம் நம்முடைய இதழின் வாயிலாக, நிறைவான வாழ்விற்கு பரிசுத்த வேதம் கூறும் ஆலோசனைகளைக் காண்போம்.

நீங்கள் உங்கள் வாழ்வை திரும்பி பார்க்கும்போது, 'நான் இதை இப்படி செய்திருக்க கூடாது!', 'நான் இப்படி பேசியிருக்கக் கூடாது!' என்று நிறைய வருத்தங்கள் நினைவிற்கு வருகிறதா? நம்மில் அநேகருக்கு மோசமான நினைவுகள் நிறைய உண்டு. அநேகருக்கு, தாங்கள் பேசிய வார்த்தைகளும், செய்த செயல்களும் மனச்சோர்வடைய செய்கின்றன. இதில் யாரும் விதிவிலக்கில்லை. வேதாகமத்தில் நாம் பவுலைப்பற்றி பார்க்கும்போது, அவர் தன்னுடைய வாழ்வைப் பற்றிய நிறைய வருத்தங்களைக் கொண்ட (1 தீமோ 1:12-14) ஒரு மனிதராக இருந்தார். ஆனாலும், அவர் ஒரு முழுமையான வாழ்வை வாழ்ந்ததாக ஆவியானவரின் துணையுடன் நமக்கு வெளிப்படுத்துகின்றார். நாமும் கூட, பவுலின் கீழ்க்காணும் வார்த்தைகளில் இருந்து, எவ்வாறு நிறைவான வாழ்வு வாழ முடியும் என்று காணலாம்.

2 தீமோ. 4:6-8 "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்ன மாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்."

நாம், இங்கே (இவ்வுலகில்) ஏன் இருக்கிறோம் என புரிந்துகொள்ள வேண்டும்..

"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே." (பிரசங்கி 12:13)

அப்படியானால், மனிதர்களாகிய அனைவருமே கடவுளுக்குப் பயந்து, அவருடைய விருப்பத்தை நிறைவேற்றவே இவ்வுலகில் இருக்கிறோம்!


சரி, இப்பொழுது பவுலிடத்திற்கு வருவோம்...

2 தீமோ. 4:7 "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"

முதலாவது, நிறைவான வாழ்வு வாழ, நல்ல போராட்டம் போராட வேண்டும்!
(Fighting the good fight)

இந்த குணத்தை பவுல் மட்டும் கொண்டிராமல், விசுவாசத்தில் தன்னுடைய உத்தம குமாரனாகிய

தீமோத்தேயுவுக்கும் இதை எழுதி ஊக்கப்படுத்துகிறார் (1தீமோ 1:18). மேலும் அவர், ''நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி" (2 தீமோ 2:3) என்று எழுதும்போது, தீங்கனுவிப்பதும் நல்ல போராட்டத்தின் முக்கிய அங்கம் என்பதை நாம்



புரிந்துகொள்ள முடிகிறது. அப்படியானால், நம்முடைய இந்த நல்ல போராட்டத்தில் நாம், தீங்கு விளைவிக்காமல், தீங்கநுபவிக்க வேண்டும். இந்த நல்ல போராட்டம் பற்றி இன்னும் தெளிவாக ஆவியானவர் யூதா நிருபத்தில் வெளிப்படுத்துகையில், ''..பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக, நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாகக் கண்டது." (யூதா 3) என்று வாசிக்கின்றோம். அப்படியானால், நீங்களும் நானும், நம்முடைய கிறிஸ்தவ வாழ்வை (விசுவாசத்தை) காப்பாற்ற போராடும் போராட்டமே நல்ல போராட்டம்.

இனிவரும் காலங்கள் நம் கிறிஸ்தவ (விசுவாச) வாழ்விற்கு சாதகமாக இல்லாவிட்டாலும், நம்முடைய விசுவாசத்தைக் காப்பாற்றவும், வளர்க்கவும், வேதாகமத்து விசுவாச வீரர்களாகிய ஆபிரகாம், தானியேல், பவுல் மற்றும் பலரைப்போல, நாமும் நம்முடைய விசுவாசத்தைக் காப்பாற்றிக்கொள்ள, தேவனுடைய விருப்பத்தின்படி (சத்தியத்தின்படி) வாழ, போராட வேண்டுமே தவிர ஒதுங்கிவிடக் கூடாது.

இந்த போராட்டம் வன்முறை சார்ந்த தீங்கு விளைவிக்கும் போராட்டம் அல்ல; மாறாக விசுவாச வாழ்வில் பற்று உறுதி கொண்டு பின்வாங்காமல் நிலைநிற்பதாகும். அன்பின் வழிநின்று தீமையை எதிர்க்காமல் சகித்து, கொள்ளை உறுதியுடன் வாழ்வதாகும். இந்த விசுவாசப் போராட்டம் சரீர நலன் சாராமல், ஆத்துமாவின் நித்திய வாழ்வை நினைத்து, தொடர்ந்து கடவுளுடைய கட்டளைகள் மற்றும்

வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

G Pay

UPI ID: biblecourseindia-3@okicici

पे

ஆண்டு சந்தா : ரூ. 100/-

Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,


A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

விருப்பங்களை மட்டும் முன்னிறுத்தி வாழ்வதாகும்.

எல்லா காரணங்களும் போராட தகுதியானவை அல்ல! நல்ல போராட்டம் எது என்பதை நாம் அடையாளம் காண கற்றுக்கொள்ள வேண்டும். "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணின வனுமாயிருக்கிறாய்." (1 தீமோ 6:12). ஆம்! பிரியமானவர்களே, நல்ல போராட்டம் என்பது 'விசுவாசத்திற்கானதாகும்' மேலும், அதின் இலக்கு, 'நித்திய வாழ்வு'. மேலும் இந்த நல்ல போராட்டத்தில், நாம் வேடிக்கை பார்ப்பவர்களாக நிற்க முடியாது, மாறாக நாம்தான் அதில் போராட வேண்டும்!

"பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்க மாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்." (1கொரி. 9:24-27)

இரண்டாவதாக, நிறைவான வாழ்வு வாழ, பவுல் 2தீமோ. 4:7-ல் எழுதியதை போல, **நாம் ஓட்டத்தை நிறைவு செய்ய**



வேண்டியது அவசியம். லூக்கா 9:62-ல் ஆண்டவர் இயேசு இதைக் குறிப்பிட்டு சொல்லும்போது, ''அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்" பலர், ஒரு நிறைவான வாழ்க்கையை வாழத் தொடங்குகிறார்கள், ஆனால் எங்கோ, எப்படியோ விட்டு விடுகிறார்கள். நாம் பந்தயத்தில் நுழைவது மட்டுமல்ல, அதை முடிக்கவும் வேண்டும். (எபி. 12:1-2; வெளி.2:10)

மூன்றாவதாக, நாம் நிறைவான வாழ்வு வாழ வேண்டுமானால், **நம்முடைய விசுவாசத்தைக் காத்துகொள்வது மிகவும் அவசியம்** (2 பேது. 2:20-22; பிலி. 3:8-14). 2 தீமோ 4:7-ல், பவுல் இதைக் குறிப்பிட்டு சொல்லும்போது, "விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்'' என்கிறார். ஆம், பிரியமானவர்களே! நாம் அனைவரும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுவோம்.

இவ்வுலகின் ஈர்ப்போ, பிசாசானவனின் தந்திரங்களோ நம்முடைய இந்த விசுவாச



ஓட்டத்தை நிறைவு செய்யாதபடி தடுக்காமல், முன்னேறி செல்வோம். இதை தான் **யூதா புத்தகம் 3ம் வசனத்தில்** நாம் வாசிக்கையில், **"விசுவாசத்திற்காக தைரியமாக போராட வேண்டும்"** என்று வாசிக்கிறோம். <u>விசுவாசமானது, நாம் கைவிடமுடியாத அளவு மிகவும் மதிப்பு உள்ளது.</u>

அன்பான வாசக நண்பரே! நீங்கள் நிறைவான வாழ்க்கை வாழ விரும்புகிறீர்களா? அப்படியானால், **நல்ல போராட்டத்தைப் போராடவும், உங்கள் ஓட்டத்தை முடிக்கவும், விசுவாசத்தைக் காத்துக் கொள்ளவும்** நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? இந்த முயற்சியில் பரலோக பிதா உங்களுக்கு துணை நின்று, ஆசீர் தருவாராக!

– அன்புடன், ஆசிரியர்

Gospel Through Media by Evangelism Team

Philemon & Kingsly in Tamil: Tamilan TV: Sunday 7:00 - 7:15 am.
Nambikkai TV: Sunday 3:30 - 4:00 pm.

Rajanayagam & Benny Martin in Tamil: Nambikkai TV: Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

Arjunan in Tamil: Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

Hindi TV program: Sunny, Francis, & Vinay David: Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

P. K. Varghese in Malayalam: Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

Joshua & Ricky Gootam in Telugu:
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

Amul Bansod – Aurangabad (Marathi)
MCN News channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.



ஞானமுள்ள பெண்கள்

அன்புள்ளம் கொண்ட சகோதரிகளே! ஆண்டவர் இயேசுவின் ராசாவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் நாம் வேதத்தில் உள்ள ஞானமுள்ள பெண்களைப் பற்றி சில காரியங்களை கற்றுக்கொள்ளப் போகிறோம்.

முதலாவது, ஞானமுள்ள பெண் தன் குடும்பத்தை கட்டுகிற பெண்ணாக இருக்கிறார் (நீதி. 14:1). ஆம் பிரியமானவர்களே, ஒரு பெண் வேலைக்கு செல்வது, படிப்பது, வெளி உலகில் சிறப்பாக செயல்படுவது எவ்வளவு பாராட்ட தகுந்ததே. ஆனாலும், முதலில் தன் குடும்பத்தை கட்டுவது என்பது மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது என்பதை வேதாகமம் வலியுறுத்துகிறது.

1) சாராள்: விசுவாசத்தின் ஞானம்: ஆதி. 18:10-14; 21:1-3; எபி. 11:14

தேவன் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் ஒரு மகனை கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். மனித ரீதியில் அது சாத்தியமற்றதாகத் தோன்றலாம். ஆனால் தேவன் தமது வாக்குதத்தத்தை நிறைவேற்றினார்.

எபி. 11:11 – சாராள் தேவன் வாக்குத்தத்தம் செய்தவர். உண்மையுள்ளவர் என்று எண்ணி விசுவாசித்தார்.

ஞானமுள்ள பெண் சூழ்நிலையைப் பார்க்காமல் தேவனுடைய வாக்கை நம்புகிறார்.

2) ரெபேக்காள்: தேவனுடைய வழி நடத்துதலை ஏற்றுக்கொண்ட பெண். ஆதி. 24:15-20; 58-67.

ஆபிரகாமின் வேலைக்காரன் ஈசாக்கிற்கு மனைவியைத் தேடி வந்தபோது, ரெபேக்காள் அவனுக்கும் அவனுடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுத்தாள். அவள் செய்த செயலில் அன்பும், தாழ்மையும், சேவை மனப்பான்மையும் வெளிப்பட்டது.

அவள் தன் குடும்பத்தை விட்டு ஈசாக்குடன் செல்ல வேண்டும் என்று கேட்டபோது, போகிறேன் (ஆதி. 24:55) என்று பதிலளித்தாள்.

ஞானமுள்ள பெண் தேவன் திறக்கும் கதவை விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்கிறாள்.

3) யோகெபேத்: பிள்ளையை விசுவாசத்துடன் பாதுகாத்த பெண்: யாத். 2:1-10; எபி. 11:23

மோசே பிறந்தபோது, எகிப்தின் ராஜாவின் கட்டளையின்படி ஆண் குழந்தைகள் கொல்லப்பட வேண்டியிருந்தது. ஆனால் மோசேயின் தாய் யோகெபேத் அவனை மறைத்து வைத்தார்.

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)

அறிந்து கொள்வோம்

மாதம் ஒரு "பூ"

காயா



காயா (Memecylon umbellatum) காய்ப்பது இல்லை. எனவே இதனைக் 'காயா' என்றனர். இம்மரம் இலங்கையில் காயான் என அழைக்கப்படும். இது அநேகமாக கத்தி கைபிடி, கோடரி கைபிடி, விறகிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

முல்லை நிலத்தில் மணி என்னும் நீல நிறத்தில் பூக்கும். மயில் கூட்டம் போல் பூத்துக் கிடக்கும். செறிவான இலைகளை உடையது. மகளிர் நெற்றியில் கைக்கும் பொட்டுப்போல் பூத்துக் கிடக்கும். சிறுசிறு பூக்களாக இருக்கும். முல்லை நிலத்தில் பூக்கும். தேன் கொண்டது. மென்மையானவை. மணியைப் போன்ற காயா பவள நிற முல்லை நிலத்தில் உதிர்ந்து கிடக்கும்.

(எபி. 11:23) அவள் தன் குழந்தையை பாதுகாக்க ஞானமாக செயல்பட்டாள்.

ஞானமுள்ள தாய் தன் பிள்ளைகளுக்காக ஜெபிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களை தேவனுடைய வழியில் நடத்துகிறாள்.

4) அபிகாயில்: சமாதானத்தை ஏற்படுத்தியவர்: 1சாமு. 25:2-32

நாபாள் தாவீதின் மனுஷர்களிடத்தில் கோபமாக நடந்துகொண்டான். எனவே, தாவீது கோபமடைந்து நாபாளின் வீட்டை அழிக்க முடிவு செய்தான்.

அப்பொழுது அபிகாயில் தாவீதிடம் சென்று தாழ்மையுடன் பேசி, அவனுடைய கோபத்தைத் தணித்தாள்.

1 சாமு. 25:22,23 - தாவீது அவளின் பேச்சைக் கேட்டு, **"நீ என்னை இரத்தப்பழியை வராதபடிக்கு இன்று என்னைத் தடுத்தாய்"** என்றான்.

ஞானமுள்ள பெண்ணின் வார்த்தைகளால் அழிவைத் தடுக்க முடியும். (நீதி. 15:1)

5) தெபோராள்: ஞானமுள்ள தலைவி: நியாயா. 4:4-10; 5:7

தெபோராள் ஒரு தீர்க்கத்தரிசியும், இஸ்ரவேலின் நியாயாதிபதியுமாக இருந்தாள். அவள் பாராக்கை ஊக்கப்படுத்தி, தேவனுடைய வார்த்தையின்படி போருக்குச் செல்லச் செய்தாள்.

ஞானமுள்ள பெண் பிறரை பயமுறுத்தாமல், அவர்களை தங்கள் அழைப்பிற்குள் நடத்துகிறார்.

அவள் பிறரை தாழ்த்துவதில்லை; அவள் பிறரை எழுப்புகிறாள்.

6) எஸ்தர்: தேவ மக்களுக்காக நின்ற பெண்: எஸ்தர் 4:13-16; 5:1-8; 7:3-6

யூதர்கள் அழிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எஸ்தர் ராஜாவிடம் செல்ல வேண்டியிருந்தது. அது அவளுடைய உயிருக்கு ஆபத்தானதாக இருந்தது.

ஆனால், எஸ்தர் நான் செத்தாலும் சாகிறேன் (எஸ்தர் 4:16) என்று கூறினாள். அதற்கு முன்பு அவள் ஜெபத்தையும், உபவாசத்தைக் கேட்டுக் கொண்டாள்.

ஞானமுள்ள பெண் தேவனைத் தேடி, பின்னர் தைரியமாக செயல்படுகிறாள்.

(ஜெபம் + ஞானம் + தைரியம்) தேவனால் பயன்படுத்தப்படும் வாழ்க்கை.

7) பிரிஸ்கில்லாள்: வேதாகமத்தை கற்றுக்கொடுத்த பெண்: அப். 18:24-26

அப்பொல்லோ வல்லமையுள்ள பிரசங்கியாக இருந்தான். ஆனால் அவனுடைய போதனையில் இன்னும் தெளிவு தேவைப்பட்டது.

பிரிஸ்கில்லாவும், ஆக்கில்லாவும் அவனை அழைத்து, தேவனுடைய வழியை இன்னும் சரியாக விளக்கினார்கள்.

ஞானமுள்ள பெண் தனக்குத் தெரிந்ததை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறாள். அவள் அறிவை பெருமைக்காக பயன்படுத்தவில்லை, மற்றவர்களை வளர்க்க பயன்படுத்தினாள்.

நாமும், இவர்களைப்போல வேதாகமத்து ஞானத்துடன், தேவனுடைய துணையுடன் நம் வாழ்வையும், பிறர் வாழ்வையும் கட்டுவோம். எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவுக்காக வாழ்வதில் தளர்ந்து போகாமல் தைரியமாக ஞானத்துடன் செயல்படுவோம்!

நம் சுயஞானம் அல்ல, தேவனுடைய வார்த்தையினாலே கிடைக்கும் சரியான புத்தியோடே செயல்படுவோம்! தேவனிடத்தில் ஜெபித்து அதை பெறுவோம்!

கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

சிறுவர்களுக்கான கேள்விகள்

1. எகிப்தின் அரசன் இஸ்ரயேல் ஜனங்களை எப்படி நடத்தினான்?
2. சாலமோன் தனது வயதான காலத்தில் கர்த்தருக்கு விரோதமாக செய்த செயல் என்ன?
3. யோதாம் ராஜா ஆசீர்வதிக்கப்பட காரணம் என்ன?
4. பாஷா ராஜா செய்த தீய காரியம் என்ன?
5. பாஷா ராஜாவுக்கு யெகூ தீர்க்கத்தரிசி மூலமாக கர்த்தர் சொன்னது என்ன?

இரண்டு குமாரர்கள்

மத்தேயு 21:28–32

பிரியமான வாலிபர்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஆண்டவர் இயேசுவின் உவமைகளை நாம் தொடர்ந்து படித்து வருகிறோம்.

இந்த மாதமும் ஒரு உவமையை தியானிக்க ஆயத்தப்படுவோம். மத். 21:28-32 இரண்டு குமாரர்களைப் பற்றி ஒரு உவமை சொல்கின்றது. தந்தை தனது திராட்சை தோட்டத்தில் வேலை செய்யும்படி அழைக்கிறார். மூத்த குமாரன் ஆரம்பத்தில் போகமாட்டேன் என்று சொல்லி, பின்பு நாள் முழுதும் தோட்டத்தில் வேலை செய்கிறான். இரண்டாம் குமாரன், 'ஐயா போகிறேன்' என்று சொல்லியும் போகாமல் அப்பாவின் வார்த்தையை அவமதிக்கிறவனாயிருக்கிறான். இதில் முதல் குமாரனே தகப்பனின் பிரியத்தை பெற்றவனாயிருப்பதை காண முடிகின்றது.



இந்த உவமையில்....

"நன்றாக தொடங்கும் இளைய சகோதரன், மோசமான நிலையை அடைகிறான்"

"மோசமாக தொடங்கும் மூத்த சகோதரன், நல்ல நிலையை அடைகிறான்"

பரம பிதாவின் மதிப்பீடு, நம்முடைய சொந்த மதிப்பீட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கக்கூடும் என்ற ஒரு வலுவான செய்தியை சொல்கின்றது.

கற்றுக்கொள்ளும் பாடங்கள்:

1. தேவன் முடிவெடுக்கும் உரிமையை நம்மிடம் கொடுக்கின்றார். பைபிள் வசனங்களுக்குக் கீழ்ப்படியலாமா? வேண்டாமா?
2. உவமையில் தகப்பனுக்கு சொந்தமான திராட்சைத் தோட்டம் என்று ஒரு இடம் குறிப்பிடப்படுவதுபோல தேவன் தம்முடைய பிள்ளைகள் தமது (சபையில்) இருக்க வேண்டும் என்பது அவர் விருப்பம்.
3. விசுவாசமானது செயல்படுத்தப்பட வேண்டும். மூத்த மகன் மனந்திரும்பி வேலை செய்ததுபோல, நாமும் மனந்திரும்பி விசுவாச செயல்கள் செய்ய வேண்டும்.
4. தேவன் யாரையும் கட்டாயப்படுத்த விரும்பவில்லை, ஆனால் விளைய இருக்கின்ற விளைவுகளுக்கு நாமே

சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1.	M. ஜோனத்தான்	- கரூர்
2.	D. டே.ப்னி	- சென்னை
3.	D. ஜூனித்தா	- சென்னை
4.	A. ஹானா ஜோதிராணி	- மதுரை
5.	V. ஏஞ்சல் ஜோயன்னா	- மதுரை
6.	J. நவீன் பீட்டர்	- மதுரை
7.	J. கிறிஸ்டினா ஜாய்ஸ்	- மதுரை
8.	A. சாம் குமார்	- பெருமாள் வலசு
9.	S. ஜூடா லியோ	- ரஸ்தா
10.	G. ஜெர்லின்	- ரஸ்தா
11.	S. ஜூடித் ஆராதனா	- ராணிபேட்டை
12.	A. ஆடின் .பேபியோ	- ராணிபேட்டை
13.	A. ஆலன் காலேப்	- ராணிபேட்டை
14.	S. ஜோசுவா	- ராணிபேட்டை
15.	A. சுபிக்ஷா	- பெருமாள் வலசு

பொறுப்பு. அங்கே, இளைய மகன் தனக்குரியதை இழந்துபோனதைப்போல.

5. மனந்திரும்பி தேவனிடம் உண்மையாய் வருகிறவர்களை அவர் புறந்தள்ளுவதில்லை. மூத்தவனைப்போல,

6. மாய்மாலமான மரியாதை வார்த்தைகளில் வெளிப்படும், கீழ்ப்படிதல் உள்ளத்திலிருந்து வரும். இதையே தேவன் விரும்புகிறார்.

கடைசியாக, பரம தகப்பனுடைய அதிகாரத்திற்கு (வசனம், சபை) அங்கீகாரம் அளிக்க வேண்டும், அவமதிக்கக்கூடாது, மரியாதை குறைவாய் நடத்தக் கூடாது, அவர் எப்பொழுதும் சிறந்ததை நம்முடைய வாழ்வில் செய்வார் என்ற மனோநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த உவமை எத்தனை அழகான பாடங்களை கற்றுக்கொடுக்கிறது. நம்முடைய பரம தகப்பன் அவருடைய வார்த்தையாகிய வேதவசனம் மூலம் நம்மேல் அதிகாரமுடையவராயிருக்கிறார். அதற்கு முழுமையாய் கீழ்ப்படிய நம்மை ஒப்புக்கொடுப்போம். கர்த்தர் பெரிய காரியங்களை செய்ய சித்தமுள்ளவராயிருக்கிறார்.

– உங்கள் அண்ணன் **ஜோசப் பீரதீப்**

பொதுவான செய்திகள்

அரசியல் சாசன தினம் - இந்தியா

இந்திய அரசியல் சாசன தினம் அல்லது இந்திய அரசியலமைப்பு நாள் Constitution Day of India அல்லது சட்ட தினம் (Law Day) எனப்படும் இந்நாள், 2015 நவம்பர் 26 ஆம் திகதியன்று முதல் முறையாக அனுசரிக்கப்படுவதாகவும். மேலும் இந்திய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட தினமான நவம்பர் 26 ஆம் நாளை, அரசியலமைப்பு தினமாக, கொண்டாடப்படுவதாக அறியப்படுகிறது.

துவக்கம்:

இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் வரைவுக்குழுவின் தலைவராக செயற்பட்ட டாக்டர் அம்பேத்கர் என்பவரை கௌரவிக்கும் விதமாகவும், நினைவுகூரும் வகையிலும் மற்றும் இந்திய அரசியலமைப்புக்காக அயாரதுழைத்த அனைவருக்கும் மரியாதை செய்யும் விதமாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியின் தலைமையில் உள்ள இந்திய அரசால் 2015 ஆம் ஆண்டு, நவம்பர் 26 இல் அரசியல் சாசன தினம் துவக்கப்பட்டு கொண்டாடப்பட்டது.

வரலாறு:

தெற்கு ஆசியா நாடான இந்தியாவின் பெரும்பகுதி 1858 லிருந்து 1947 வரையில் ஆங்கிலேயர்கள் காலனித்துவ ஆட்சிக்கு கீழ் இருந்துள்ளது. இக்காலகட்டத்தில், ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலைப்பெற இந்திய சுதந்திர இயக்கம் படிப்படியாக முயன்று வெற்றியை ஈட்டியது. 1934 ஆம் ஆண்டுவாக்கில் இந்திய நாட்டிற்கு அரசியல் நிர்ணயசபை அமைக்க ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பிறகு 1936-இலும், மற்றும் 1939-லும் இருமுறை இக்கோரிக்கையை பற்றி வலியுறத்தப்பட்டன. அதன்படி 1942 ஆம் ஆண்டு மார்ச் இல் கிரிப்ஸ் தூதுக்குழு அரசியல் நிர்ணய சபையை உருவாக்க பரிந்துரைக்கப்பட்டது. அதன்பின்பு 1946 மே இல் அரசியல் நிர்ணய சபை ஏற்பத்த பரிந்துரைக்கப்பட்டு, 1946 சூலையில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடைபெற்றது 1946 திசம்பர் 11 இல் அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட்டு அச்சபையின் தலைவராக இராசேந்திர பிரசாத் தேர்வு செய்யப்பட்டார்.

1947 ஆகத்து 15 க்கு (விடுதலைக்கு) பின்பு, பிரித்தானியாவின் இந்தியா, இந்திய மாகாணம், பாக்கித்தான் மாகாணம் என இருவேறு பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச்சாசனத்தை, உருவாக்கும் பணியை அரசியல் நிர்ணயசபை குழு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க...



அக்டோபர் - 2026

காலை			மாலை	
எபேசியர்			**ஏசாயா**	
1.	4	☐	11-13	☐
2.	5:1-16	☐	14-16	☐
3.	517-33	☐	17-19	☐
4.	6	☐	20-22	☐
பிலிப்பியர்				
5.	1	☐	23-25	☐
6.	2	☐	26,27	☐
7.	3	☐	28,29	☐
8.	4	☐	30,31	☐
கொலோசெயர்				
9.	1	☐	32,33	☐
10.	2	☐	34-36	☐
11.	3	☐	37,38	☐
12.	4	☐	39,40	☐
1 தெசலோனிக்கேயர்				
13.	1	☐	41,42	☐
14.	2	☐	43,44	☐
15.	3	☐	45,46	☐
16.	4	☐	47-49	☐

காலை			மாலை	
1 தெசலோனிக்கேயர்			**ஏசாயா**	
17.	5	☐	50-52	☐
2 தெசலோனிக்கேயர்				
18.	1	☐	53-55	☐
19.	2	☐	56-58	☐
20.	3	☐	59-61	☐
1 தீமோத்தேயு				
21.	1	☐	62-64	☐
22.	2	☐	65,66	☐
			எரேமியா	
23.	3	☐	1,2	☐
24.	4	☐	3-5	☐
25.	5	☐	6-8	☐
26.	6	☐	9-11	☐
2 தீமோத்தேயு				
27.	1	☐	12-14	☐
28.	2	☐	15-17	☐
29.	3	☐	18,19	☐
30.	4	☐	20,21	☐
தீத்து				
31.	1	☐	22,23	☐

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431

அடுத்த இதழில்...

அறிந்துகொள்வோம்!

பொட்டுக்கடலை பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்ட ஒரு சிறந்த உணவாகும்.

எடை குறைக்க உதவுகிறது: இதில் கலோரிகள் குறைவு மற்றும் நார்ச்சத்து அதிகம். இது நீண்ட நேரம் வயிறு நிரம்பிய உணர்வைத் தரும்.

செரிமானம் மேம்படும்: அதிக நார்ச்சத்து உள்ளதால் மலச்சிக்கல் தடுக்கப்படும்.

இதய ஆரோக்கியம்: இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கவும், கொலஸ்ட்ரால் அளவைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

புரதச் சத்து: தாவர அடிப்படையிலான புரதமும், இரும்புச்சத்து, கால்சியம் போன்ற தாதுக்களும் இதில் நிறைந்துள்ளன.

இஸ்ரயேலர்கள் ஒடுக்கப்படுதல்

எனக்கு பிரியமான பிள்ளைகளே! இந்த மாதம் இஸ்ரேல் மக்கள் எகிப்து தேசத்தில் ஒடுக்கப்படுதல் (அடிமைப்படுத்தப்படுதல்) குறித்து நாம் படிக்கலாம்.

யாத்திராகமம் 1-ம் அதிகாரம்.

கானான் என்னும் தேசத்திலே யாக்கோபின் (இஸ்ரயேல்) குடும்பம் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் கானான் தேசத்திலே மிகவும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது யாக்கோபின் குடும்பம் எகிப்து தேசத்திற்கு போய், அங்கே பல வருடங்களாக வாழ்ந்து வந்தனர். அந்த சமயத்தில் எகிப்து தேசத்திலே கொடுமையான ஒரு அரசன் வாழ்ந்து வந்தான். இஸ்ரேல் மக்கள் எகிப்து மக்களை விட அதிகமாகவும், பலத்தும் காணப்பட்டார்கள். அப்பொழுது அந்த நாட்டின் அரசன் இஸ்ரேல் மக்களை அடிமைப்படுத்தவும், அதிகமான வேலைகளைக் கொடுத்து வேதனைப்படுத்தவும் தொடங்கினான்.

ஆனாலும், இஸ்ரேல் மக்கள் மகா பரிசுத்த கர்த்தரின் கிருபையால் இன்னும் பலத்து காணப்பட்டனர். இருப்பினும் எகிப்தின் அரசன் இஸ்ரேல் மக்களை இன்னும் அதிகமாய் வேதனைப்படுத்தவும், அயராது வேலை செய்யவும் ஒடுக்கினான். அப்பொழுது சர்வ வல்லமையுள்ள கர்த்தர் இஸ்ரேல் மக்களின் கூக்குரலைக் கேட்டு அவர்களுக்கு விடுதலை கொடுத்தார்.

எனக்கு பிரியமான பிள்ளைகளே! இந்தப் பாடத்திலிருந்து ஒரு இரகசியத்தை உங்களுக்கு சொல்லுகிறேன் கேளுங்கள். நீங்கள் இப்பொழுது சிறுவயதில் உள்ளீர்கள் அல்லவா? எதிர்காலத்தில் நீங்கள் பெரியவர்களாகும்போது இதை மனதில் வைத்து செயல்படுங்கள். அது என்னவென்றால் நீங்கள் இப்பொழுது கிறிஸ்தவர்களாக இருப்பதால் இந்த உலகத்தில் உள்ள சில மக்கள் உங்களை பகைப்பார்கள், ஏளனமாக பேசுவார்கள், அவமானப் பேச்சுக்களை பேசுவார்கள், உங்களை உதாசீனப் படுத்துவார்கள்.

நீங்கள் எதைக் கண்டும் பயப்படாதீர்கள். நம்முடைய கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர், அவர் உங்களைப் பாதுகாத்து வழிநடத்துவார். இந்த உலகத்திலே, கிறிஸ்தவ வாழ்க்கையை தைரியமாக வாழ கற்றுக்கொள்ளுங்கள். யாருக்காகவும் பயப்படாதீர்கள். கர்த்தர் உங்களோடிருந்து வழிநடத்துவாராக. ஆமென்.

மனப்பாட வசனம்: ஏசாயா 41:10

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்."

– சகோ. பீட்டர்

சாலமோனின் மனைவிகளும், சிலை வழிபாடும்

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைகளா? அனைவரும் நலமாக இருக்கின்றீர்களா? கர்த்தருடைய நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து, உங்களை ஆசீர்வதிப்பாராக.



சாலமோன் ராஜா மிகவும் நேர்மையானவராகவும், மிகுந்த ஞானம் மற்றும் புத்திக் கூர்மையுள்ளவராகவும் உலகம் முழுவதும் அறியப்பட்டார். அவருடைய பெருமையைக் குறித்த செய்திகள் தேசம் முழுவதும் பிரபலம் ஆனது.

சாலமோன் ராஜா தனது ஆட்சி காலத்தில் மிகப்பெரிய ஞானத்தையும் செல்வத்தையும் பெற்றிருந்த போதிலும், அந்நிய நாட்டுப் பெண்கள் உடனான திருமண உறவுகளால் சிலை வழிபாட்டிற்கு வழிவிலகினார் என்று



வேதாகமத்தில் வாசிக்க முடிகிறது. சாலமோன் அரச கூட்டணி மற்றும் உடன்படிக்கைகளுக்காக பல அந்நிய நாட்டுப் பெண்களை திருமணம் செய்து கொண்டார். சாலமோனிற்கு 700 மனைவிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்தனர்.

சாலமோனின் வயதான காலத்தில் அவருடைய மனைவிகள் அவருடைய இருதயத்தை அந்நிய தெய்வங்களை வணங்கும்படி செய்தனர். மேலும் இந்த அந்நிய தெய்வங்களுக்கு தூபங்காட்டி பலியிடுவதற்கு சாலமோன் மேடைகளை காட்டினார். கர்த்தருக்கென்று தேவாலயம் கட்டிய சாலமோன் அந்நிய தெய்வங்களை வழிபடும்படி மேடைகளை கட்டினார்.

தேவன் சாலமோனிடம் அந்நிய பெண்களை திருமணம் செய்யவேண்டாம், அவர்கள் உன்னை அந்நிய தெய்வங்களை வழிபட செய்வார்கள் என்று இரண்டுமுறை எச்சரிப்பு செய்திருந்தார். ஆனாலும் சாலமோன் கீழ்ப்படியாமல் அந்நிய பெண்களை திருமணம் செய்தார். இதனால் கர்த்தர் சாலமோனின் வாழ்நாளுக்குப் பின் அவனது ராஜ்ஜியம் கிழித்தெடுக்கப்படும் என்று தேவன் அறிவித்தார். சாலமோனின் மகனான ரெகொபெயாமின் காலத்தில் இஸ்ரயேல் ராஜ்ஜியம் வடக்கு மற்றும் தெற்கு ராஜ்ஜியங்களாக பிரிக்கப்பட்டது.

கர்த்தருக்குள் அன்பான பிள்ளைகளா!! சாலமோன் ராஜா மிகுந்த ஞானம் உடையவராக இருந்தாலும் கர்த்தருக்கு விருப்பம் இல்லாத காரியத்தை செய்ததினால் மிகப்பெரிய விளைவுகளை சந்தித்தான். அதினால் நாம் சாலமோன் ராஜாவைப் போல இல்லாமல் கர்த்தர் சொல்லும், அதாவது சபையில் சொல்லப்படும் அனைத்து வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிகிற பிள்ளைகளாக இருப்போம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 2:7

"அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்: உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்."

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

யோதாமின் ஆட்சி

(2நாளாகமம் 27,28ம் அதிகாரம்)

கடவுளின் செல்லங்களா! எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? நல்லா இருக்கிறீர்களா?

இந்த மாதம்கூட உசியா ராஜாவுக்கு பிறகு, யோதாம் என்னும் ராஜாவின் ஆட்சி எப்படியிருந்தது என்பதை கற்றுக்கொள்வோமா?

உசியா ராஜாவுக்கு அப்புறம் அவங்களோட மகன் யோதாம் ராஜாவாக பொறுப்புக்கு வந்தாரு. யோதாம் ரொம்ப அமைதியான, நல்ல பிள்ளையா வளர்ந்திருந்தாரு. அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, நான் எப்படி இந்த நாட்டை நல்லபடியா பாத்துக்கிறது? அப்படின்னு யோசிச்சு, தேவனுக்குப் பயந்து நடக்க முடிவு பண்ணாரு. அப்பா உசியா செஞ்ச சில தவறுகளை யோதாம் செய்யவே இல்லை.

தேவனுடைய ஆலயத்துக்குப் போக பயப்படல, அதே நேரம் தேவனுக்கு விரோதமான தப்பான காரிங்களையும் பண்ணல. மக்கள் எல்லாரையும்



அன்போடு நடத்தினாரு. நாட்டுல இருக்கிற கோட்டைகளை கட்டினாரு. தனது ஊரை அழகுபடுத்தினாரு. யோதாம் எப்பவுமே சரியான பாதையிலேயே நடந்ததால, தேவன் அவங்களை எதிரிகளிடமிருந்து பாதுகாத்து, நாட்டை ரொம்ப செழிப்பா வச்சிருந்தாரு. யோதாம் எல்லார்கிட்டேயும் நல்ல பெயர் வாங்கினாரு.

நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள்:

1. பெரியவர்களின் தவறுகளிலிருந்து திருந்திக் கொள்ளுதல்:

அப்பா அம்மா அல்லது டீச்சர்கள் பண்ற சில சின்னத் தவறுகளை நாமும் செய்யாமல், நல்ல விஷயங்களை மட்டும் கற்றுக்கொண்டு வாழ வேண்டும்.

2. சரியான பாதையை தேர்ந்தெடுத்தல்:

செல்போன் கேம்ஸ், சோம்பேறித்தனம் என்ற தப்பான வழிகள் நம்மைச் சுத்தி இருந்தாலும், யோதாமைப்போல எப்போதுமே நேர்மையான, நல்ல வழியையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

3. கடவுளுக்கு முதலிடம் தருதல்:

நாம் படிக்கிறப்ப, விளையாடுறப்ப எல்லாவற்றிலும் தேவனை நினைத்து, மற்றவர்களுக்கு உதவியாக, நல்ல பிள்ளைகளாக வாழும்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

மனப்பாட வசனம்: 2 நாளாகமம் 27:6

"யோதாம் தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதினால் பலப்பட்டான்."

— சகோ. அன்பு ஏசுதாஸ்

பாஷாவுக்கு விரோதமாக யெகூ

கர்த்தருக்கு மிகவும் பிடித்த செல்ல பிள்ளைகளே! இந்த இதழின் வாயிலாக மீண்டும் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்வடைகிறேன்.

பிள்ளைகளா! இந்த மாதமும்கூட நாம் ஒரு வேதாகமத்து சம்பவத்தைப் படிக்க இருக்கிறோம். அது 1 இராஜாக்கள் 16ம் அதிகாரத்திலுள்ள பாஷா என்ற ராஜாவைப் பற்றினது.

குட்டீஸ், இந்த பாஷா ராஜா இஸ்ரயேலின்மேல் இரண்டு வருடம் ஆட்சி செய்தார். அப்பொழுது அவர் ஆட்சி செய்த, மக்களை வழிநடத்தின காரியங்கள் கர்த்தருக்கு பிடிக்காததாக இருந்தது. அப்படி என்ன செய்தார்? என்று நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது.

அதென்னவெனில், பாஷா ராஜாவை கர்த்தர் தூளிலிருந்து உயர்த்தி, தனது ஜனமாகிய இஸ்ரயேலின் மேல் தலைவனாக (ராஜாவாக) வைத்திருக்கையில், அவரோ கர்த்தரையும் அவருடைய வார்த்தையும் புறக்கணித்து,



யெரொபெயாமின் தீய வழியிலே நடந்து, வீணான சிலை வழிபாடு செய்ததுமன்றி, இஸ்ரயேல் மக்களையும் அதில் ஈடுபட வைத்தினால் கர்த்தருக்கு மிகுந்த கோபமூட்டினார். இதனால் கர்த்தர் யெகூ என்ற தமது தீர்க்கதரிசி மூலமாக பாஷா ராஜாவுக்கு நான் செய்யப்போகிறதை அறிவி என்றார். அதென்னவெனில், பாஷா ராஜாவையும், அவனது வீட்டாரின் பின்னடியாரையும் அழித்துப்போட்டு, அவனது வீட்டை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் வீட்டைப்போல ஆக்குவேன் என்று சொன்னார்.

அவ்வாறே கர்த்தர் தனது தீர்க்கதரிசியாகிய யெகூவினால் பாஷாவைக் குறித்துச் சொல்லியிருந்த அவருடைய வார்த்தையின்படியே, சிம்ரி என்ற ராஜா பாஷாவின் வீட்டாரையெல்லாம் அழித்துப்போட்டான்.

குட்டீஸ்! கவனித்தீர்களா? கர்த்தருக்கு மிகுந்த கோபம் எப்படி வந்தது? அவர் நேசித்து, உயர்த்தி வைத்த ராஜா தனது வார்த்தையின்படி செய்வார் என்று நம்பியிருந்தார். ஆனால் பாஷா ராஜாவோ அவருக்கு அறவே பிடிக்காத சிலை வழிபாடுக்குள் சிக்கினது மட்டுமல்லாமல், இஸ்ரயேல் ஜனங்களையும் அதில் ஈடுபட வைத்து, அவரும், அவரது குடும்பத்தாரும் கர்த்தருடைய கோபத்திற்கு ஆளாகி, மரித்தார்கள் என்பதை படித்தோம் அல்லவா?

பிள்ளைகளா! நமக்கு நல்ல படிப்பு, பிரியமான அம்மா, அப்பா, நல்ல நண்பர்கள், அன்பான சபை, நமக்கு அன்றாட தேவைகளை ஏற்ற வேளையில் சந்தித்தல் இப்படி அநேக ஆசீர்வாதங்களால் கர்த்தர் நம்மை ஆசீர்வதித்திருக்கையில், அவருக்குப் பிரியமில்லாத காரியங்களை அறவே நம்மிடமிருந்து விலக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தை நாம் கடைபிடிக்க வேண்டுமல்லவா பிள்ளைகளா? அவ்வாறே நீங்கள் செய்வீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். அடுத்த இதழில் சந்திப்போம் குட்டீஸ்!

மனப்பாட வசனம்: சங்கீதம் 34:14

"தீமையை விட்டு விலகி, நன்மைசெய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்."

— சகோ. ஜான் செல்லையா

செப்டம்பர் மாத கேள்விகள்

(யோவான் சுணிசேஷ புத்தகத்தில் இருந்து)



1) யூதர்கள் யாருடனே சம்பந்தம் கலவாதவர்கள்?

2) யாருடைய வார்த்தையினிமித்தம் சமாரியாவில் அநேகம்பேர் இயேசுவின்மேல் விசுவாசம் வைத்தார்கள்?

3) ராஜாவின் மனுஷனுடைய குமாரன் உயிர் பிழைத்த நேரம் என்ன?

4) எருசலேமில் ஆட்டு வாசலருகே இருந்தது எது?

5) சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று இயேசு யாரிடம் கேட்டார்?

6) மரித்தோர் யாருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்?

7) சத்தியத்திற்குச் சாட்சி கொடுத்தவன் யார்?

8) எதை ஆராய்ந்து பார்க்கும்படி இயேசு கூறினார்?

9) இயேசுவைக் குறித்து எழுதியிருக்கிறவர் யார்?

10) கலிலேயா கடலின் மறுபெயர் என்ன?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-10-2026

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழின் பதில்கள்

1. யோவான் 3:1
2. யோவான் 3:2
3. யோவான் 3:14
4. யோவான் 3:15
5. யோவான் 3:17
6. யோவான் 3:30
7. யோவான் 4:5
8. யோவான் 4:6
9. யோவான் 4:8
10. யோவான் 4:8


சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்


1) Mrs. M. பியூலா சாந்தி - ஈரோடு
2) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
3) D. ராஜன் - மதுரை
4) R. ஞானசிரோன்மணி - மதுரை
5) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
6) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
7) S. டேவிட் சாந்தகுமார் - செங்கோட்டை
8) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
9) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
10) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
11) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
12) S. பாக்கியராஜம் - மதுரை
13) S. கார்த்திக் - கரூர்
14) K. பிலோமினா - விழுப்புரம்
15) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
16) Mrs. M. ஜெனி ஈஸ்வரி - கரூர்
17) M. ராஜா - கரூர்
18) R. சரோஜா - தென்கலம்
19) S. சுசிலா ஆபிரகாம் - மதுரை
20) Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
21) M. அன்பழகன் - தங்கமேடு
22) N. ஜான் செல்லையா - மதுரை
23) Mrs. J. ஜெயராணி ஜான் - மதுரை
24) Mrs. சூரிய பிரியா - மதுரை
25) Mrs. ராணி குமரன் - கரூர்
26) Dr. ஆட்லின் ஆனந்தன் - மதுரை
27) A. அரவிந்த் - மதுரை
28) Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
29) M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
30) P.S. ருக்மணி - ஈரோடு
31) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
32) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
33) Mrs. ஹெலன் திலக் - தூத்துக்குடி
34) Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
35) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
36) P. ரேச்சல் ஜானிமா - நெல்லை
37) Mrs.P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
38) J. விஜய் - மதுரை
39) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
40) A. லலிதா - புதுக்கோட்டை
41) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
42) A. ரோஸ்மேரி - சென்னை
43) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
44) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
45) Mrs. பெட்ரீஷியா டேவிட் - சேலம்
46) J. ஜான்சி - ஆனைமலை
47) N. ஞானசுந்தரி நாகராஜன் - பாளையங்கோட்டை
48) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
49) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
50) S. ஜெனிபர் சில்வியா - நெல்லை
51) J.G. ரோசலின் ஜோசப் - நெல்லை
52) J. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
53) A.P. ராஜா - சென்னை
54) Mrs.A. சந்திரா - மதுரை
55) S.G. சேகர் - ராணிபேட்டை
56) Mrs. பிளாரன்ஸ் முத்தையா - மதுரை
57) T. பால்வின் - சாந்தபுரம்
58) J. கிறிஸ்டோபர் தாஸ் - நாகர்கோயில்
59) N.V. அஜிதா சுபின் - மார்த்தாண்டம்
60) A. அனிதா ஸ்டாலின் - தரங்கை
61) Mrs. J. பூங்கொடி ரவி - முத்தூர்
62) S. பேபி சந்தோஷ்குமார் - தங்கமேடு
63) Mr. டேவிட் ராஜ் - அனவரதநல்லூர்
64) Mr. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
65) Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
66) S. ஜெபமணி - தென்காசி
67) T. பால்வின் - கன்னியாகுமரி
68) S. ஷீபா ஞானவின்சா - டோனாவூர்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !


Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1** 📖 **94421 23819**
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th September 2026
Posted at Arasaradi HPO on 10th & 11th September 2026


நமது ஆசிரியர் எழுதிய இரண்டு புதிய புத்தகங்கள் கிடைக்கும்!











புதிய கைப்பிரதிகள் கிடைக்கும்!

புத்தகம் மற்றும்
கைப்பிரதிகள் தேவைக்கு
92 4421 4421
& 92 4431 4431

If undelivered please return to :
EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To